பொருள்முதல் வாதத் தத்துவார்த்தம் மார்க்ஸ் புதிதாக கண்டுபிடித்த தத்துவார்த்தம் அல்ல. பல தத்துவார்த்தங்கள் தோன்றிய காலமுதற்கொண்டு இருந்து வந்திருக்கிறது. "இந்த பிரபஞ்சம், அண்ட சராசரங்கள் எல்லாம், ஒரு கடவுளால் அல்லது ஒரு மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல; ஆனால் அது எப்பொழுதுமே ஒரு ஜீவனுள்ள ஜோதியாக இருந்து வந்திருக்கிறது; முறையாக அது மாறிக்கொண்டும், மங்கிக்கொண்டும் இருந்து வந்திருக்கிறது; இனியும் எப்பொழுதும் அப்படித்தான் அது இருக்கும்" என்று ஹெராகிலிடஸ் என்ற ஒரு புராதன காலத்திய கிரேக்க தத்துவ ஞானி கூறினார். அவர் பொருள்முதல் வாதி.

அதே போன்று நம் நாட்டிலும் பண்டைக்காலம் வேதங்களுக்கு முன்பே சார்வாகர் என்ற ஒருவர் பொருள்முதல் வாதத்துக்காக போராடினார். இதனால், கடவுளை மறுப்பவர்களுக்கு நரக வேதனை ஏற்படும் என்று நமது கீதையில் ஒரு அத்தியாயமே எழுதப்பட்டுள்ளது. இது எதற்காக? அன்று கடவுளை மறுத்து வந்த ஒரு மரபு இருந்து வந்தது என்பதைக் காட்டுகிறதல்லவா?

மார்க்ஸ் ஏங்கெல்ஸ் மகத்தான சேவையால் ஒன்று அவர் இந்த பொருள்முதல் வாதத் தத்துவார்த்தத்தோடு இயக்கவியல் முறையையும் இணைத்தது. இந்த முறை மார்க்ஸீயத்தின் ஜீவநாடி. அது எந்தப் பிரச்னையையும் இந்த முறையால் தான் அணுகுகிறது. இந்த முறை என்ன?

இயற்கையில் உள்ள எதையும் மார்க்ஸீய இயக்கவியல் முறை தனித்தனியாகப் பார்ப்பது கிடையாது. இயற்கையில் உள்ளவைகளெல்லாம் பரஸ்பரம் ஒன்றோடொன்று இணைந்து, ஒன்று மற்றொன்றைச் சார்ந்து, ஒன்று மற்றொன்றை நிர்ணயித்துக் கொண்டே உள்ளன என்று பார்க்கிறது இந்த முறை. உதாரணமாக தண்ணீரால் நெல் அதிகமாக விளைகின்றது. நிலத் தன்மையால் நெல் அதிகம் விளைவது கிடையாது. இதைத் தனித்தனியாக மார்க்ஸீய இயக்கவியல் முறை பார்ப்பது கிடையாது. நீர், உரம் உள்ள பூமியின் தன்மை, காலநிலை, தோற்ற நிலை ஆகிய சகலத்தையும் சேர்த்து, எல்லாம், அப்படி நெல் விளைவதும் ஒன்றோடொன்று இணைந்து நிற்கின்றன என்பதை அது பார்க்கிறது.

இரண்டாவதாக; இயற்கை அசையாது மாறாது. அசைவற்று நிலையாக இருப்பதல்ல. அது எப்பொழுதும் அசைந்து கொண்டே, மாறிக் கொண்டே, வளர்ந்துக் கொண்டே இருக்கிறது. ஒன்று தோன்றி வளர்வதும், மற்றொன்று அழிந்து மறைவதும் இயற்கை நியதி. வித்து செடியாகி, செடியாகி, மரமாகி, பழுதுபட்டு போவது இயற்கை நியதி. ஆகவே இயற்கையில் உள்ளவைகள் எல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை என்று பார்த்தால் மட்டும் போதாது. அவைகள் எப்படி தோன்றுகின்றன, எப்படி, எது வளர்கின்றது, எப்படி, எது அழிந்து வருகின்றது என்பதையும் பார்க்க வேண்டும். இதுவும் மார்க்ஸீய இயக்கவியல் முறையின் முக்கிய அம்சம்.

மூன்றாவதாக: இயற்கையின் வளர்ச்சி முறைக்கும் ஒரு நியதி உண்டு. சிறிது காலம் வரையில் கொஞ்சம் கொஞ்சமாக, அளவு கணக்கில் அளவு ரீதியில் வளர்ச்சி ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கட்டம் வந்தவுடன் திடீரென்று அந்தப் பொருளின் தன்மையே மாறி, வடிவம் மாறி, புதியதோர் வளர்ச்சி ஏற்படுவதை பார்க்கிறோம். உதாரணமாக: பூமியில் ஒரு விதையை போடுகிறோம். சில நாட்கள் வரையில், தண்ணீரையும், சத்தையும் பெற்று அந்த விதை பெரிதாகிக் கொண்டே வருவதைப் பார்க்கிறோம். ஆரம்பத்தில் நாம் போட்ட விதைக்கும், இன்றும் சில நாட்கள் வரையில் அளவில் ஒரு வித்தியாசம் இருக்கும். ஆனால், ஒரு குறிப்பிட்ட அளவு பெரிதாகி சத்துப் பெற்றவுடன் அந்த விதை வெடித்து, செடியாகி வருவதைக் காண்போம். விதைக்கும் செடிக்கும் தன்மையிலேயே பெரிய மாற்றம் இருக்கிறதல்லவா? இதுபோன்று தான் கொஞ்சம் கொஞ்சமாக வளரும் போது ஆரம்பத்தில் விதையின் அளவில் தான் இருக்கிறது. ஆனால் ஒரு நிலை வளர்ச்சிக்குப் பிறகு செடியாக மாறுகின்றது. இப்பொழுது அந்தச் செடியைப் பார்த்தால் விதையின் தோற்றமோ தன்மையோ இல்லாதிருப்பதைப் பார்ப்போம். இயற்கையில் உள்ள சகலத்துக்கும், அவைகளின் வளர்ச்சிக்கும் இந்த நியதி பொருந்தும். இதுவும் [illegible] சொல்கிற மார்க்ஸீய இயக்கவியல் முறை.

நான்காவதாக: இயற்கையில் ஏற்படும் வளர்ச்சி, ஒன்றோடொன்று பிணைப்பட்ட சக்திகள், மோதுவதாலேயே ஏற்படுகின்றது. தண்ணீர் நீராவியாகிறதைக் காண்கிறோம். ஒளி சக்தி தண்ணீரைத் தண்ணீர் உருவத்தில் வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது. மேலும் உஷ்ணம் அதிகமாகும் போது, அது அதை நீராவியாக்குவதற்கு முயற்சிக்கிறது. சிறிதும் உள்ள வரையில் [illegible] தண்ணீரைப் பக்குவம் போது உடபோராட்டத்தில் உச்சக்கட்டத்தை அடையவே மோதுதல் ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. உஷ்ண சக்தி அதிகமாக இருக்கும்போது ஒளி சக்தியை பலமற்றதாகச் செய்து தண்ணீரை நீராவியாக்கி விடுகிறது. | மேலும்